புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

உ

விரோதிஞு (1889) ஆவணிமீ உஅஉ ஆரம்பமானது.

பத்திரிக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5·00
இலங்கையில் தபாலுடன் 9·00
இந்தியா ரூ 8·00
இந்தியாவிற்கு தபாலுடன் 12·00
தென்னிந்தியா ரூ 9·00
இந்தியாவிற்கு தபாலுடன் 13·00
முற்பண மனுப்பின்றி கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.

முதன் முறைக்கு
ஒரு கலம் ரூபா 10·00
அரைக்கலம் " 5·50
கால்கலம் " 4·00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதம் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பின்றி கவனிக்கப்படா.

"சீர்பூத்த கருவிழு ணர்ச்சி தேக்கச் சிவம்பூத்த நிகமாக மங்களோங்கப், பார்பூத்த புறச்சமய நிருள்களிங்கப் பரம்பூத்த சைவநெறி பாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்த நிறைஇ தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேனு மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்."

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமா னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சரு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஞு தைமீ உசுஉ; (1934 பிப்ரவரி 8) வியாழக்கிழமை. { இலக்கம்—அஉ



## கந்தரலங்காரம்.

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேலெறிந்த காவலனே.

இ—ள்: சிந்து வெந்து - கடல் சுவறி, கொக்கு தறிபட்டு எறிபட்டு உதிரம் குமு குமு எனக் கக்க - சூரபன்மன் கொண்ட மாமரவடிவம் தறியுண்டு எறியப்பட்டு இரத்தம் குபு குமு என உமிழவும், கிரி ஊடுருவ - கிரௌஞ்சம் என்னும்மலை ஊடுருவுண்டு பிளவுபடவும், கதிர்வேல் தொட்ட காவலனே - ஒளியையுடைய வேற்படையைச் செலுத்திய தலைவனே, பொக்கக் குடிலில் புகுதாவகை - (தமியேன்) பொய்யாகிய(நிலைபற்ற)உடம்பாகிய சிறு குடிலின்கண்ணே குடியிருக்கச் செல்லாவண்ணம், புண்டரீகத்தினும் செக்கச் சிவந்த கழல் வீடு தந்து அருள் - செந்தாமரைப் பூவைக்காட்டிலும் மிகவும் சிவந்த தேவரீருடைய திருவடியாகிய மோட்ச வீட்டைத் தந்தருள வேண்டும் எ—று.

பொக்கம்-பொய்; இக்தே ரிலையில்லாமை; "மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது" என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. செக்கச்சிவந்த, கன்னங்கரிய என்பன பண்பின் மிகுதியைக் குறிக்கும் "மீமிசைச் சொற்கள்" என்பர். குமுகுமு, ஒலிக்குறிப்பு.

கடல் சுவறவும் சூரபன்மன் கொண்ட மாமரவடிவம் ஊடுருவுண்டு இரத்தம் பெருகவும் கிரௌஞ்சகிரி தகள்படவும் வேற்படையைச் செலுத்திய முருகோனே, அடியேனைப் பிறவியிற் பிரவேசிக்கவொட்டாது தடுத்து ஆட்கொண்டருள்வீராக எனப் பிரார்த்தித்தபடி. (ரூக.)

### சீனி விலை யேற்றம்.

சென்றவாரம் கொழும்புத் துறைமுகத்துக்கு வரவேண்டிய சீனி மூடைகள் வராமையால் சீனியின் விலை ஏறிவிட்டது. மூடை ஒன்று இப்போது முன்னரிலும் பார்க்க 8 ரூபா கூடியிருக்கிறது. தற்போது கொழும்பில் ஒரு இறாத்தல் சீனி 15சதம் விற்கிறது. வருகிற சனிக்கிழமை தான் கொழும்பில் சீனி இறக்குமதியாகும்.

### மறியல் வீட்டிற் கொலைசெய்தவனுக்கு மரணதண்டனை.

சேனுநிராசாவின் கொலைவழக்கிற் சம்பந்தப்பட்டுச் சிறைச்சாலையிலிருந்த மாரிமுத்துவை இராசேந்திரம் என்னும் இன்னொரு மறியற்காரன் குற்றிக்கொண்டு விட்டானென்பது முன்பு இப்பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. குறித்த இராசேந்திரமென்பவன் கொழும்புச் சுப்பிறிம்கோட்டில் விளங்கி மரணதண்டனை விதிக்கப்பட்டான்.

### பலன் கிடைத்துவிட்டதா!

வருகிற 13-ம் தேதி அரசாங்க சபையின் கூட்டமொன்று கூடும். அப்போது யாழ்ப்பாணத்து நாலு பிரதிநிதி ஸ்தானங்களைப்பற்றிய அறிக்கை வெளியிடப்படும். யாழ்ப்பாணத்தவர் தம் பிரதிநிதிகளை அனுப்புவதற்கான நியமனங்களைக் குறிப்பதற்குச் சட்டம் மாற்றி, இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. உபதேர்தல்கள் மே மாதத்தில் நடைபெறலாமென்று நம்பப்படுகிறது. இங்குள்ள பட்ட வேட்டுவரும், பச்சோந்திகளும் தேசாதிபதிகளையும் குடியேற்றநாட்டு மந்திரிகளையும் வெள்ளை உத்தியோகஸ்தர்களையும் கோக்கித் தவம் கிடந்தது வீண்போகுமா?

### எட்டு அந்தர் நிறையுள்ள சுறா.

சென்ற திங்கட்கிழமையன்று வெலிகமத்துக் கடலில் ஓர் பிரமாண்டமான சுறாமீன் ஓர்வலைஞனால் அகப்படுத்தப்பட்டது. அதன நிறை 8 அந்தருக்குமேல் இருக்கிறதாம். அதைப்போன்ற பெரிய மீனை அந்தப் பக்கத்துக் கடலில் இதுவரை பிடிக்கப்படவில்லையாம்.

### காதலராற் கைவிடப்பட்டதால் தற்கொலை.

சென்றதிங்கட்கிழமையன்று பலப்பிற்றியாவைச்சேர்ந்த சிசிலியா என்னும் 20 வயதுடைய மங்கை தூங்கித் தற்கொலை செய்திறந்திருக்கக் காணப்பட்டாள். இவள் இறந்தைக்கு 2 ஆண்டுகளுக்குமுன் ஜெரோனிஸ் என்பவனை மணமுடித்து வாழ்ந்துவந்தாள். இறந்தைக்குச் சில காலத்திற்குமுன், அவன் அவளை விட்டுப் பிரிந்து வேறோர் விவாகம் முடித்துக் கொண்டான். இதன்பின்னர் சிசிலியா பனல்கமத்தைத் தோட்டத்திலுள்ள ஓர் காவற்காரனைக் காதலித்துவந்தாள். அவனும் இவளைக் காதலிப்பவன்போல விருந்தான். எனினும், சென்றவாரம், அவனும் அவளை விட்டுப் பிரிந்து வேறோர் பெண்ணை விவாகஞ் செய்தான். இதனால் மனமுடைந்த பெண் தற்கொலைசெய்திறந்தாளென்று சொல்லப்படுகிறது.

### நூலின்மீதும் துவேஷமா?

பம்பாய் அரசாங்க கெஜட் பத்திரிகையில் பின்கண்ட செய்தி காணப்படுகிறது: "தேசப்பிரிய ஜதீந்திர மோகன் சென்குப்தா" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புத்தகத்தில் கவர்ன்மெண்டார் விஷயத்தில் துவேஷ மேற்படக்கூடிய சில விஷயங்கள் இருப்பதால் அப்புத்தகப்பிரதி எங்குக் கிடைத்தாலும் பறிமுதல் செய்யப்படுமென தேசாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். இப்புத்தகத்திற்கு ஸ்ரீ டி. கே. கோஷ் முகவுரை யெழுதியிருக்கிறார்.

## இந்தியச் செய்திகள்.

### திருவாங்கூரில் தீண்டாதார் முன்னேற்றம்.

திருவாங்கூரில் உள்ள தீண்டாதார் பொதுக் கிணறுகள், மடங்கள் குறித்த சில வீதிகள் என்பனவற்றை இதுவரையும் உபயோகியாது தடுக்கப்பட்டார்கள். இப்போது, அங்கேயுள்ள பொது நிலையங்களான கிணறுகள் சத்திரங்கள் முதலியவற்றில் தீண்டாதார் எனப்படுவோர்க்கும் உரிமையுண்டெனத் திருவாங்கூர் மகாராஜா உத்தரவு பிறப்பித்திருக்கிறார். திருவாங்கூர் தீண்டாமைக்குப் பெலமான ஆணை இதுவரையும் இருந்துவந்தது என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

### தேசியத் தலைவர் விடுதலை

தேசிய மகாசபைத் தலைவராக விருந்து பின் சிறைவாசம் பெற்றவராகும் ஸ்ரீஜத் எம். எஸ். ஆனே அவர்கள் தற்போது நாகபுரி மத்திய சிறைக்கூடத்திலிருந்து விடுதலைபெற்றுர். இவர் விடுதலையடையவேண்டிய காலம் பெப்ருவரி மாதம் 15-ம் தேதியாகும். அரசினர் காலவெல்லை முடியமுன் அவரை விடுதலை செய்ததன் நோக்கம் யாதென விளங்கவில்லை.

### காஸ்மீரத்திற் கலகம்.

காஸ்மீரச் சமஸ்தானத்தில் உள்ள முஸ்லீம்கள், தமது மன்னருக்கு மாறாக கீதியீனமாகக் கிளர்ச்சி செய்து சென்றவாரம் கலகம் செய்தனர். அவர்களுடைய அட்டூழியத்தைப் பொலிசார் அடக்கமுடியாது போகவே, யுத்தவீரர் ஆங்குதோன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலகக்காரரைக் கலைத்தனர். ஏழு முஸ்லீம்கள் வரை இறந்தனர். இப்போது அங்கே அமைதி நிலவுகின்றது.

### சர்வகட்சி மகாநாடு.

டக்டர் அன்சாரியும், டெல்கிப் பிரபல பரிஸ்டருமான மிஸ்டர் அஸப் அலியும் பம்பாய் சர்வகட்சி மகாநாட்டு அமைப்பாளரான சேர் சிமன்லால் சேதல்வாத் அவர்களுக்கு ஓர் கடிதம் விடுத்திருக்கின்றனர். தாம் இருவரும் மேற்படி மகாநாட்டிற் பங்குபற்றுதல் காங்கிரஸ் பிரதிநிதிகள் என்ற நியதியில் அன்றிச் சொந்த ஹோதாவிலேயே என்று அக்கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். தேசிய மகாசபையாகும் "காங்கிரஸ்" இப்போது அமைப்புக் குலைந்திருப்பதால் தாம் கூறும் அபிப்பிராயங்கள் தேசிய மகாசபையின் அபிப்பிராயத்தோடு ஒத்துக்கொள்வன என்று நம்பவொண்ணுது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### 5 லட்சம் ரூபா!

சென்ற ஞாயிற்றுக்கிழமை வரையில் பீகார்ப் பூகம்ப சேதச் சகாயத்தின் பொருட்டு பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு 5 லட்சம் ரூபாவுக்குமேல் உதவப்பட்டிருக்கிறது.

### ஸ்ரீஜத். வி. ராஜகோபாலாச்சாரியார்.

சட்டமறுப்பியக்கம் சம்பந்தமாகத் தற்போது கோயம்புத்தூர்ச் சிறைச்சாலையில் இருக்கும் தென்னுட்டுத் தலைவர் ஸ்ரீஜத் வி. இராஜகோபாலாச்சாரியர் அவர்கள் இந்த மாதம் 16-ந் தேதி தண்டனைக்காலம் முடிந்ததும் விடுதலையாக்கப்படுவார் என்று அறிகிறோம். ஸ்ரீஜத் ஆச்சாரியார் காந்தி அடிகளுடன் தீண்டாமை யொழிப்புப் பிரசாரம் செய்வார் என அறிகிறோம்.

## ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்கார்

### சீவியக் குறிப்புக்கள்.

ஸ்ரீ இரங்கசுவாமி ஐயங்கார் 1877-ம் ஆண்டில் தஞ்சாவூரில் ஜெநனமானுர். உரிய வயதிற் கல்வி பயின்று, சென்னை இராஜதானிக் கல்லூரியில் இருந்து பீ. ஏ. பட்டம் பெற்றுப் பின் சட்ட வல்லுனர் பரீட்சையிலும் தேறிச் சில காலம் தஞ்சாவூரிலேயே நியாயவாதியாகக் கடமை பார்த்தனர்.

அரசியல் விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் நிபுணத்துவம் படைத்த அவர்க்குச் சட்டத்தொழில் உகந்ததாகக் காணப்படவில்லை. எனவே, தமது மாமன் முறைபூண்ட, காலஞ்சென்ற ஸ்ரீ கஸ்தூரி ரங்க ஐயங்காரால் நடாத்தப்பெற்ற "ஹிந்து"ப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமை பார்த்தார். அரசியல் விஷயங்களில் தலைசிறந்த ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் அவர்களின் கீழ், இவர் கடமைபார்த்த காலத்தில், பத்திரிகைத் தொழில் நடாத்துவதில் அதிக அனுபவம் ஏற்பட்டது. அவர் எழுதிய "இந்திய அரசியல் நிர்மாணம்" என்னும் நூல் அரசியல் வாதிகள் அனைவராலும் போற்றப்பட்டு வந்தது.

ஸ்ரீ கஸ்தூரி ரங்க ஐயங்கார் இறந்தபின், ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்காரே ஹிந்துப் பத்திரிகையின் பொறுப்பை ஏற்று நடத்தினுர். அத்துடன் சுதேசமித்திரன் பத்திரிகைப் பொறுப்பையும் ஏற்றுர்.

அவர், காலஞ்சென்ற தேசபந்து சித்தரஞ்சன தாஸருடன் இந்தியா எங்கணும் சுற்றுப் பிரயாணம் செய்து, அக்காலத்திற் சுயராச்சியக் கட்சியை ஸ்தாபிதம் செய்ய உதவியாயிருந்தார். இருமுறை இந்தியச் சட்டசபையில் சுயராச்சியக் கட்சி அங்கத்தவராயிருந்து காலஞ்சென்ற பண்டிதர் மோதிலால்நேரு அவர்களுக்கு உறுதுணையாயிருந்து வந்தார்.

ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்கார் மூன்று முறை இங்கிலாந்திற்குப் பிரயாணம் செய்திருக்கிறுர். மாண்டேகு-செம்ஸ்போர்ட் அரசியற் சீர்திருத்தம் சம்பந்தமாகவே முதன்முதல் அவர் இங்கிலாந்திற்குச் சென்று பிரிட்டிஷ் அரசினரோடு வாதாடினுர். 1931-ம் ஆண்டில் நிகழ்ந்த இரண்டாவது வட்டமேசை மகாநாட்டிற்கு மகாத்மா காந்தியடிகளுடன் சென்றது இரண்டாவது முறை. வட்டமேசை மகாநாட்டுக் கூட்டு நிர்வாகசபைக்குப் பிரதிநிதியாய்ச் சென்றது மூன்றும் முறை.

பண்டிதர் ஜவஹர்லால் நேருவுக்கு முன், ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்கார் காங்கிரஸ் எனப்படும் இந்திய தேசிய மகாசபையின் காரியதரிசியாகவிருந்து அரிய தொண்டுகள் ஆற்றினுர். ஆனால், தமது அந்திய காலத்தில் சட்டமறுப்பியக்கத்தை விடுத்துத் தேசிய மகாசபை சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிக்கவேண்டுமென்று தமது பத்திரிகையில் எழுதிவந்தார். தீண்டாமை யொழிப்பு விஷயத்திலும் ஸ்ரீ ஐயங்கார், அடிகளுக்குப் பேருதவி புரிந்து வந்தார்.

ஸ்ரீ ஐயங்கார், அகில-இந்திய பத்திரிகாசிரியர் சங்கத்துத் தலைவராயிருந்தவர்.

சென்னை "ஹிந்து"ப் பத்திரிகை, "சுதேசமித்திரன்" என்னும் இரு பத்திரிகைகளும் தற்போது அடைந்திருக்கும் செல்வாக்கிற்கு ஸ்ரீ ஐயங்காரே காரணம் எனக் கூறுதல் மிகையாகாது. அன்னாரின் பிரிவால் பத்திரிகை உலகிற்கே பெரும் நட்டம் சேர்ந்திருக்கிறது.

### அடிகளின் அநுதாபம்.

"பத்திரிகைத் தொழிலில் மிக்க அநுபவம் படைத்தவரும், நியாயங்களை எவர்க்கும் அஞ்சாது எடுத்துக் கூறுபவருமான எனது நண்பர் ஸ்ரீ ஐயங்காரின் அகால மரணத்தினால் இந்திய மகாசபைக்கும் பாரத தேசத்திற்கும் சொல்லொணு நட்டம் சேர்ந்துவிட்டது எனக் கூறல் மிகையல்ல" என்று தற்போது கூனூரில் தங்கும் மகாத்மா காந்தியடிகள் ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்காரின் மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும் கூறினுர்.

## விவாகசோபனம்.

அத்தியடி ஸ்ரீ அம்பலவாணர் அவர்களின் பௌத்திரன் ஸ்ரீ அம்பலவாணர் இரத்தினசபாபதி ஆமுகத்திற்கும் வண்ணார் பண்ணை கந்தர்மடம் குத்தகைகாரர் ஸ்ரீ S. V. வல்லிபுரத்தின் புத்திரி ஸ்ரீமதி பாக்கியலக்ஷிமிக்கும் இந்தப் பிப்ரவரிமாதம் 10ம் தேதி சனிக்கிழமை இரவு 11 மணியளவில் மணமகளில்லத்திற்றானே விவாகசோபனம் நடைபெறும்.

அழைப்புப்பத்திரம் இல்லை.

கந்தர்மடம்.
8 - 2 - 34.
Mis. 203 8 - 2 - 34)


# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஞு
தைமீ ௨௰௬ வியாழக்கிழமை.


## வரங்கிடைத்தால் என்செய்வது?

இரகசியமாகவோ, கரவாகவோ, இங்குள்ள சிலர் ஏறக்குறைய மூன்று வருடகாலமாகத் தவங்கிடந்து கேட்கும் வரம் கிடைக்கும்போல் புலப்படுகின்றது. யாழ்ப்பாணப் பிரிவிலிருந்து நான்கு அங்கத்தவர்களை அரசாங்கசபைக்கு அனுப்புதற்கு, அல்லது நான்குபேர் சனங்களைக்கொண்டு தம்மைத் தெரிவித்துக்கொண்டு போதற்கு ஆனநியமனத்திருநாள் ஒன்று வந்திருப்பதாக நம்பக்கிடக்கின்றது. யாழ்ப்பாணத்துள்ள இந்தச் சிலர் முந்தி மூன்றுமுறை கேட்கவும் நியமனத் திருநாள் கோடுத்தல் முடியாது, அரசாங்கசபைப் பிரமாணங்கள் அப்படிச் செய்தற்கு இடந்தரா, அவற்றுள், எந்தப் பிரமாணத்தையும் திருத்துதல் இயலாது என்று நியமனநாள் கொடுக்க மறுத்த அரசினர், இப்பொழுது தாமாக வலிந்து கொடுக்கத் தலைப்பட்டமைக்குக் காரணம் என்ன என்பதைச் சென்ற பிரசுரத்தில் ஒருவாறு எடுத்துக் காட்டியுள்ளோம். சீரி தூரத்துப்போது நாகபாம்பு மனிதருடைய காலுக்குள் வந்து ஒதுங்கிச் சாரைப்பாம்புபோல் தீமையின்றிக் கிடப்பதுமுண்டென்று உலகத்திலேசோல்லுவார்கள் ஆனால் அரசினர் செய்யும் கிரமங்கள் அக்கிரமங்களைப்பற்றி, அடிமைச்சாதியினராகிய நாங்கள் பேசுவதற்கு அதிகாரமில்லை. நிற்க,

நியமனநாள் ஒன்று நேருமானால் செய்வதென்ன என்பதே இப்போழுது சிந்திக்க வேண்டியது. யாழ்ப்பாணத்தில் இப்போழுதுள்ளவர்களுள் தக்கவர்கள் என்றிருப்போர் சனங்களின் கேள்விப்படி ஆரம்பத்தில் அரசாங்கசபைக்குச் செல்லாது அதனைப் பகிஷ்காரஞ்செய்து நிற்கின்றனர். இப்போழுது நியமனநாள் வருமாயின் அவர்களைச் சம்மதிக்கச்செய்து அவர்களையே அனுப்பி வைப்பதோ, இல்லையேல் அந்த நாள்தொடக்கம் இற்றைவரையில் அரசாங்கசபையிற் போய்ப் புகத்தான் வேண்டும் என்று சுயநலங்கருதிக் கரந்தும் தம் சகோதரரை வஞ்சித்தும் கருமம் பார்த்து நிற்கும் அந்தச் சிலருள் நால்வரை அனுப்புவதோ என்பது தான் இந்தச் சந்தர்ப்பத்திற் சிந்திக்கவேண்டியது.

எவ்வகையான சுவாதீனமுமில்லாத நாமமான அரசாங்கசபைக்கு, "அடியார்க்கும் அடியேன்" என்று நிற்கும் பிந்திய சிலருள் நால்வரை, நாமாகத் தெரிந்தனுப்பாமல், தாமாகப் போகவிடுதலும், அவர்கள் அந்தச் சுவர்க்க உலக பதவியில் தேவநாள் ஒன்றாகிய ஒருவருடகாலத்திற்குத் தங்கள் ஆசை தீர இருந்துவிட்டு வரவிடுதலும் நல்லது தான். ஆனால் அப்படி ஒருவருடந்தானே, அற்பகாலந்தானே, என்று அவர்களை நாம் அனுப்பினால், இல்லையேற் போய்ப் புகவிட்டால், அந்த ஒருவருட காலத்துள் இவர்கள் செய்துவிடும் தீமைகளையும் வேற்றுமைகளையும் அவமானச் செயல்களையும் அடிமைத்திற விருத்தியையும் பின்பு இல்லாமல் அகற்றி விவகாரங்களைச் சரிப்படுத்துவதற்கு, நன்னிலைப்படுத்துவதற்கு, குறைந்தகணக்கு இருபது வருடமாயினும் வேண்டுமே. குபவனுக்குப் பலநாள் வேலை தடியடிகாரனுக்கு ஒரு நொடிப்பொழுது வேலை யென்பதுபோலல்லவா இருக்கும். இந்தச் சிலர் எங்கள் மூதாதைகளாகிய தமிழ்மக்களின் கௌரவம் நேர்மை அஞ்சாமை யதார்த்தம் முதலிய தோன்மைகளையெல்லாம் மறந்து "நம் சாதிக்கெல்லாம் ஒருவரவே தாத் தான் பிறந்தார் வந்து நடுவே" என்ற நிலையில் இறங்கிவிட்டார்கள். நடந்து முடிந்ததையிட்டு இரங்கி இனி ஆவதென்ன!

ஆனால், இன்னுமொன்று சொல்லத்தக்கது. அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ் செய்தமையினாற்றான், அரசினர் தமிழ் மக்களை அலட்சியஞ் செய்கிறார்கள், தமிழ்மக்களுக்குத்தக்க உத்தியோகங்கிடைக்கவில்லை, அரசினர் தமிழ்மக்கள்மீது வெறுப்புக் கொண்டுவிட்டார்கள் ஆதலினால் நாங்களும் அரசாங்கசபையுட் புகுந்துவிடவேண்டும் இல்லையேல் குடிகெட்டுவிடுமென்று இரகசியமாகவும் வெளிப்படையாகவும் இவர்கள் சொல்லியும் எழுதியும் வந்தார்களல்லவா? இப்போழுது நியமனநாள் கிடைத்தால், இவர்கள், இந்தவிதமான குறைவுகளை அகற்றக்கூடிய திறமைவாய்ந்த பிரதிநிதிகளைத் தானே அனுப்புவார்கள். ஆரம்பத்தில் மேற்படிசபையைப் பகிஷ்காரஞ் செய்த பிரதிநிதிகளுட் பலர் தக்க அநுபவமுந் திறமையும் வாய்ந்தவர்களேன்பது இந்தச் சிலரும் ஒத்துக்கோண்ட விஷயம். இவர்களுக்கும் அவர்களுக்கும் அபிப்பிராய பேதத்தினால் வேற்றுமை நேர்ந்ததே யல்லாமல், தகைமை போதாதென்ற காரணம்பற்றி வேற்றுமை வரவில்லை. இப்போழுது இவர்கள் அந்தத் தகைமையும் அனுபவமுமுள்ள தலைவர்களை விடுத்து வேறு யாரையும் அனுப்புவார்களேயானால், இவர்களுடைய சுயநலநோக்கம் பொறாமை பேராசை வஞ்சகம் எல்லாம் உலகத்திற்கு வேளிப்படுமேன்பது நிசம்.

## அன்பர்களே! சிந்தியுங்கள்!

எமது தாய் நாட்டார் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுப் படுங்கஷ்டங்களை நாடோறும் பத்திரிகைகளிற் படித்து பின், நாம் அன்னவருக்கு உதவி செய்யாதிருக்கலாமா? உதாரத்துவத்தில் தலைசிறந்த தமிழ் மக்களல்லவா நாம் எல்லோரும்! காலதாமதத்தால் ஆம்பயன் இல்லை. ஆதலால், தங்களால் இயன்ற பண உதவியைச் செய்யுங்கள்! சிறுதுளி பெருவெள்ளமாய் முடியும். போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம் என்பதை மனத்திற் கோண்டு, தங்கள் தருமத்தை இந்த இந்துசாதனாலயத்திற்குத் தாமதமின்றி அனுப்புங்கள்.

எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பூகம்பசேத சகாயநிதிக்கு இற்றைவரை உதவியவர்கள் வருமாறு:—

| | ரூ. ச. |
|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது:- | 273 01 |
| ஸ்ரீ N. இராமலிங்கம் (திருக்கோணமலை) | 2 00 |
| ,, V. S. சாத்திகேசு | 2 00 |
| ,, S. சதாசிவம் | 1 00 |
| ,, K. கைலாசபிள்ளை (இராமச்சந்திரத்தலைவர் மண்டைதீவு) | 5 00 |
| திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை, சாதனபாடசாலைகளின் ஆசிரியர்கள் (இரண்டாம்பகுதி) | 25 00 |
| ஸ்ரீ T. C. இராசரத்தினம் | 2 50 |
| ,, T. N. சுப்பையா | 6 00 |
| மெசர்ஸ் N. வைத்தியலிங்கம் கம்பெனி (யாழ்ப்பாணம்) | 5 00 |
| டி கம்பெனி உத்தியோகஸ்தர்கள் | 5 00 |
| ஸ்ரீ வி. சண்முகலிங்கம் | 5 00 |
| ஸ்ரீ T. P. குழந்தைவேலு (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்) | 5 00 |
| ஸ்ரீ C. சேமாங்கந்தர் (டி பாடசாலை ஆசிரியர்) | 2 00 |
| ஸ்ரீமதி S. தங்கரத்தினம் (டி ஆசிரியை) | 2 00 |
| ஸ்ரீ M. சின்னையா (டி ஆசிரியர்) | 1 00 |
| ,, K. இரத்தினசபாபதி (டி ஆசிரியர்) | 1 00 |
| ஸ்ரீமதி A. முத்துப்பிள்ளை (டி ஆசிரியை) | 1 00 |
| ஸ்ரீ K. முத்துக்குமாரு (டி ஆசிரியர்) | 1 00 |
| ஆக ரூ. | 344-51. |

திருத்தம்: சென்ற பிரசுரத்தில் தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர்கள் உபகரித்ததொகை 115-00 என்பதை 11-50 ரூபா எனவும், ஸ்ரீ சம். வ. சபாபதி உபகரித்த 1.00 என்பதை 10-00 எனவும் மாற்றுக.

சென்ற திங்கட்கிழமையன்று பாபு இராஜேந்திரப்பிரசாத் அவர்களுக்கு எம்மால் முதற்பகுதிப் பணமாக 200 ரூபா தந்தியில் அனுப்பப்பட்டிருக்கிறது.

மானேஜர்,
இந்துசாதனம்.

## உலகம் பலவிதம்

எமது இலக்க (25 - 1 - 34) பத்திரிகைத் தொடர்ச்சி.

வெளியே சென்றிருந்த வேலாயுதம்பிள்ளை வீட்டிற்கு மீண்டுவந்து ஸ்நானம் சந்தியாவந்தனம் போசனம் முதலிய முடித்துக்கொண்டு தன்மகளைப்பற்றி யோசித்துக்கொண்டு தலைவாசலில் இருக்கும் போது முருகரும் அங்கே வந்தார்; இவரவரைக் கண்ட வேலாயுதம்பிள்ளை முகமலர்ச்சியோடு இருக்கைவிட்டெழுந்து "அம்மான் வாருங்கள், வாருங்கள், கண்டுவெகுநாள், ஏதோ எங்களை முற்றாய் மறந்துவிட்டீர்கள்; வருஷப்பிறப்புக்குப் பிறகு இந்தப்பக்கத்தை எட்டிப்பார்க்கவுமில்லை; உங்களைக் காணவேணும் காணவேணும் என்று, காத்திருந்தேன்; கண்டு கொள்ளக்கிட்டவில்லை" என உபசாரஞ்சொல்லி, அவரை ஒரு நாற்காலியில் இருத்தினார். பின்னரும் வேலாயுதம்பிள்ளை "ஏன், அம்மான், இந்தப்பக்கம் வருவதில்லை; என்னவிசேஷம்" என்று கேட்க, முருகர் "ஒன்றுமில்லை, தம்பி, இப்பொழுதுகொஞ்சக்காலமாக எனக்கு அதிகம் சுகமில்லை; வயசும்போய்விட்டது; முந்தின உசார் இல்லை; அதிகம் நடக்க, வெய்யிலில் மழையில் போக வர, கடுமையான வேலை செய்ய, இப்பொழுது என்னால் ஏலவில்லை, தம்பி, இதனால்தான் நான் அதிகம் வெளியிற்போவதில்லை; நானும் இங்கே வரவேணும் வரவேணுமென்று எத்தனையோ நாள் புறப்பட்டும் சந்திக்கவில்லை; எனக்குத் தெரியும் நீரும் பிள்ளையும் குறைசொல்லுவீர்களென்று. உண்மையைச் சொல்லுகிறேன் தம்பி, நான் அப்படியொரு வஞ்சகமாய் இங்கை வராமல் விடவில்லை..............." என்று சொல்வதற்கிடையில் வேலாயுதம்பிள்ளை "ஐயோ, அம்மான், இதெல்லாந் தெரியும், நீங்கள் எங்களை மறக்கவும் மாட்டீர்கள், நாங்கள் உங்களை மறக்கப்போவதுமில்லை" என்று சொல்லிவிட்டு "கேசவன், இங்கே, அம்மான் அல்லவோ வந்திருக்கிறார்" என்று அவர் தம் மனைவியைக் கூப்பிட, மனைவி "கையில் அவசரமான அலுவலாயிருக்கிறேன், இதோ வந்து விடுகிறேன்" என்று அங்கிருந்தே சொன்னாள்.

* * *

"அம்மான், எங்கள் குடும்பத்தில் நடக்கும் கருமங்களில் உங்களுக்கு இரகசியமான தொன்றுமில்லை; உங்களை நான் காணவேணுமென்று காத்துக்கொண்டிருந்தது வேறொன்றுக்குமல்ல; இங்கு அயலிலுள்ள எவர்களுக்கும் இன்னும் இது காரியந்தெரியாது; நம்முடைய மருமகன் கொஞ்சங் குழப்படி பண்ணுகிறார்; இவள்பிள்ளை மனஸ்தாபப் பட்டுக்கொண்டு தன் பிள்ளைகளோடு வந்து, ஏறக்குறைய இரண்டுமாத காலமாக இங்கேதான் இருக்கிறாள்; என் பிள்ளை இரண்டு மாசத்திற்கல்ல, இரண்டு வருஷத்திற்கல்ல, என்சீவனுள்ளளவும் இங்கேயிருந்தாலும் எனக்கு அது சந்தோஷந்தான்; ஆனால் புருஷன் மனைவி எங்கள் கண்காண, எங்கள் காலத்தில் இப்படிப் பிரிந்திருக்கிறதென்றால், எனக்கு மனம் ஒருப்படுமா; ஆறுதல் வருமா, அம்மான். இதை நினைக்க நினைக்க என்மனம் வேதனை அடைகிறது" என்று வேலாயுதம்பிள்ளை சொல்லிக் கவலைப்பட்டுப் பெருமூச்சு விட்டார். "தம்பி, செய்தி இப்படியோ, அது எனக்குத் தெரியாது, நான் கொஞ்சம்முந்தி இங்கே வந்துவிட்டுப் போனபோது பிள்ளையைக்கண்டேன்; ஏதோ கொஞ்ச நாளுக்குத் தாய் தகப்பன் வீட்டில் வந்து நிற்கிறதென்றல்லவோ நினைத்தேன்; இது மனவருத்தமான காரியந்தான்; ஆனாலும் இப்பொழுது ஒன்றும் முழுகிப்போகவில்லை; புருஷன் பெண்டிருக்கிடையில் பிணங்கு வருவதும், பிரிந்திருக்கிறதும் பின் சமாதானமாவதும் இந்தக்காலத்திற் சகசந்தானே; இதெல்லாஞ் சரிவரும்; ஆனால், உங்கள் மருமகன் நல்ல சுவாதியாச்சே, உங்கள் மகளும் தங்கமான பிள்ளை; இப்படி இவர்களுக்கிடையில் வேற்றுமை வர வேண்டியதென்ன! என்று முருகர் கேட்க, "ஓம், அம்மான், எனக்குமது நூதனமாகத்தான் இருக்கிறது; வேறொன்றுமல்ல, இப்பொழுது அவருடைய கூட்டம் வாய்க்கவில்லை; இதனாலேதான் இப்படியெல்லாம் வந்ததென்று என்மகள் சொல்லிவந்து கவலைப்படுகிறாள். அவளையும் அந்த ஆள் மெத்தச் சிறுப்பினைப்படுத்தி விட்டதாகத் தெரிகிறது; முந்தி இங்கே வந்து என்மகள் நின்ற சமையங்களில், தங்கைச்சி உனக்கு உடம்பு சுகமில்லை, இங்கே நின்று உடம்பைத் தேறச் செய்துகொண்டு போ என்று தாய்மறித்தாலும், "பாவம், அம்மா, அவரை நல்ல சாப்பாடு மற்றும் வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட விட்டு விட்டு நான்மாத்திரம் சுகமாய் இங்கே இருக்கிறது ஞாயமல்ல" என்று தாய்க்குத்தானும் புத்தி சொல்லிவிட்டுக் கூடிக்கொண்டு போகின்ற பிள்ளை, இப்பொழுது செத்தாலும் இனி அங்கே போகமாட்டேன் என்று ஒரு நிலையாய் நிற்கிறாளே; அம்மான் நான் இதற்கு என்ன செய்வேன்; வயசிலும் அறிவிலும் அநுபவத்திலும் மேற்பட்ட நீங்களே எனக்கு ஒரு உபாயஞ்சொல்லித் தரவேண்டும்........." என்று சொல்லி வேலாயுதம்பிள்ளை மனவருந்தப்படும்போது அவர் மனைவியும் அங்கே வந்தாள்.

* * *

வந்தவள் மிக்கஆத்திரத்தோடு 'அம்மான் நடந்ததெல்லாம் இவர் இப்பொழுது உங்களுக்குச் சொல்லியிருப்பாரென்று நினைக்கிறேன்; இதுக்கு என்ன செய்வது; இந்த மனுஷனும் என்னைத்தானே ஒவ்வொரு நாளும் ஏசுகிறார்; குறை சொல்லுகிறார்; எனக்குத்தெரியுமோ இப்படி வருமென்று; பையனை அந்த நாளிற் பார்த்தபொழுது குணமானவன் போற் காணப் பட்டான்; அதனால், நானும் இவரோடு தேசத்தோடு சொந்தத்துக்குள் ஒருவனை எடுத்துச் சடங்கு முடித்து வைத்துவிட்டால் நல்லாயிருப்பார்களென்று நினைத்தேன்; இப்படி வருமென்று முந்தி ஆருக்குத் தெரியும்; ஏன், இந்த இரண்டு பிள்ளைகள் தலைமுறைக்கு அந்தப் பையனில் ஒருத்தர் விரல்மடித்து ஒருகுறை சொல்ல முடியாமல் நடந்து வந்தான்; இப்பொழுது எங்கள் பொல்லாத காலமோ, என்பிள்ளைசெய்த பாவமோ, எவருடைய கண்திட்டி நாத்திட்டியோ, ஆர் அறிவார்; நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றை நினைத்த விதமாய் வந்து முடிந்து விட்டது. அம்மான், நீங்கள்தான் ஒருவாறு இதைச் சரிப்பண்ணி வைக்கவேணும்; இன்னும் நாட்பட்டால் காரியம் இங்கே அயல் அட்டத்தில் வெளிவந்துவிடும்; அதற்கு முந்தி அலுவல்பார்க்க வேணும்; அல்லாமலும் அம்மான், உங்களுக்குத் தெரியாததல்ல; ஒருகுடும்பத்தை நெடுநாள் பிரிந்திருக்கவிட்டால பிறகு ஒற்றுமைப்படுத்துவது இலேசான காரியமல்ல; எல்லாம் அறிந்த உங்களுக்குப் பெண்ணாய்ப் பிறந்த நான் அதிகஞ் சொல்லுவதென்ன......" என்று கூறி முடித்தாள். முருகர் தம் மூக்கில்விரலை வைத்துச் சிறிது நேரம் யோசித்தார்.

(வரும்.)

## விவாகம்.

பலாய்நாட்டைச் சேர்ந்த தைப்பிங்கில் அரசினர் ஒப்பந்தகாரராகக் கடமை பார்ப்பவராகிய ஸ்ரீ வே. க. முருகேசபிள்ளை அவர்களின் புத்திரி ஸ்ரீமதி கமலாதேவிக்கும், ஸ்ரீ கதையாபிள்ளையின் மகன் ஸ்ரீ சுவாமிநாதனுக்கும் இன்று மணமகளில்லத்திற்றானே விவாகம் இனிது நிறைவேறுமது மணமக்கள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழ எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

## இது முறையல்லவே.

இந்து சமயக் கோவிலுள் பாதரட்சை அணிந்து கொண்டு செல்லுதல் ஆசனத்திருத்தல் முதலிய பல செயல்கள் அசாரமென விலக்கப்பட்டிருப்பது எவருமறிந்ததோர் விஷயம்.

கொழும்பு தவட்டக்காவத்தை தைப்பூச உற்சவத்திற்கு வேடிக்கைபார்க்கச் சென்றிருந்த சில ஐரோப்பியர் திருக்கோவிலிலுள்ள சுவாமி முன்பாக மேலையிட்டு ஆசனத்தமர வைத்திருந்தது நகரத்தாரின் அறியாமையோ அன்றித் தங்கலநாயர்களுக்கு இப்பழக்கம் பலவிடங்களிலும் நடந்து வருவதோ என அறிய இக்காட்சியைக்கண்ட பல இந்துக்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர்.

கொழும்பு நகரத்தார் இனிமேலும் இவ்வழக்கத்தைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதாகக் கொழும்பு "இந்துயாத்ரிகர்" ஒருவர் தெரிவிக்கிறார்.

## கொழும்பு விவேகானந்தசபை.

சைவசித்தாந்த பண்டித பாலபண்டித பரீட்சைப் பேறுவிபரம்.

சென்ற ஆவணி மீ இச்சபையால் நடத்தப்பட்ட மேற்குறித்த பரீட்சைகளிற் சித்தியெய்தியோர் விபரம் வருமாறு:—

சித்தாந்த பண்டித பரீட்சை.

பரீட்சிக்கப்பட்டோர் மூவருள்ஒருவரும் சித்தியெய்திலர்.

சித்தாந்த பாலபண்டித பரீட்சை.

பரீட்சிக்கப்பட்டோர் முழுத்தொகை 13. கீழ்க்குறிக்கப்படும் பெயருள்ள நால்வரும் சித்தியடைந்தனர்:—

முதல்வகுப்பு.

சபாபதி - சுப்பையா, சங்கத்தானைச் சைவ வித்தியாசாலை, சாவகச்சேரி.*

இரண்டாம்வகுப்பு.

க - பொன்னம்பலம், சங்கத்தானைச் சைவ வித்தியாசாலை, சாவகச்சேரி.

சி - பரமேஸ்வரன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்

பே - தம்பையா, நீர்வேலிதெற்கு, நீர்வேலி.

* இப்பரீட்சையில் முதன்மைபெறுமிவரே தங்கப்பதக்கத்துக் குரியவராகின்றார்.

குறிப்பு:—அடுத்த பரீட்சைக்குரிய பாடவிதானமும் அது நடத்தப்படும் தேதி முதலிய விபரங்களும் வரும் மாசிமீ ௧௫௨ (27 - 2 - 34) நடைபெறும் வருடாந்தக் கூட்டத்தின் பின் நிச்சயிக்கப்பட்டு வெளியிடப்பெறும்.

# உபதேச காண்டம்.

ஏழாவது

## பஞ்சாக்கர மான்மியச் சருக்கம்.

(முற்றொடர்.)

இங்ஙனமாக, ஏகபுத்திரனாகிய தருமனென்பவன் தானுந் துறவறத்தைக் கடைப்பிடித்தொழுகக் கருத்துக்கொண்டு, தன பிதாவாகிய சுபுத்தனுக்குத் தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டான். அவன் சொல்லக் கேட்ட பிதா பெரிதும் மனக்கலக்கமடைந்து தன் பிள்ளையைப் பார்த்து, "ஆ! மகனே, நீ என் குலமுதல்வனல்லவா? உன்னையொழிய வேறு குழந்தைகள் எங்களுக்கு உண்டா? சந்ததி விளங்கவேண்டுமென்றெண்ணியன்றோ, உன்னை நாங்கள் அரிதிற் பெற்று வளர்த்துக் கல்வியையும் வேண்டிய பருவத்தில் ஊட்டிவைத்தோம்; நீ கற்ற கல்வி முழுவதையும் உனக்கும் பிறர்க்கும் பயன்படச்செய்வதை விடுத்துக் கயிறில் ஊற்றிய பாலைப்போலக் கைவிடப்போகின்றனையா? எம்மோடு ஒத்த மரபிலுள்ள ஒருகன்னிகையைத்தேடித் தெரிந்து உனக்குக் கல்யாணஞ் செய்துவைத்து அந்தக் காட்சியைப் பார்க்கலாமென்று உன் தாயும் நானும் ஆவலோடு காலம் பார்த்திருக்கின்றோமே. மணக் கோலத்துடன் உன்னைப் பார்க்க எண்ணியிருக்கும் நாங்கள், காவித் துணியோடும் உருத்திராட்சத்தோடும் தண்டு கமண்டலத்தோடும் ஆண்டி வேடம் பூண்டு நீ வருவதைக் கண்ணுற்றுப் பார்க்கத் தரிப்போமா? அப்படிக் காண நேர்ந்தால் அந்தக் கணங்களைப் பிடுங்கியல்லவா எறிந்துவிடல்வேண்டும்! அடா, என் அருமைக் குழந்தாய்! இன்னமும் நான் சொல்வதைக் கேள்; பத்துமாசம் பாடுபட்டுச் சுமந்து பெற்றெடுத்த தாயின் வயிறு பற்றியெரிய, மார்மேலுந் தோண்மேலும் வைத்துப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த தந்தை சிந்தை நொந்து கலங்க, நீ இல்லறத்தை விடுத்துத் துறவறத்தைக் கடைப்பிடித்தால் மும்மூர்த்திகளும் உன்னை முனிவார்களன்றோ?" என்று சொல்லி வருந்தினன்.

தருமனுடைய தந்தை இங்ஙனந் துயருற அவன் தாயானவள் இன்னமும் பன்மடங்கு கவலை கொண்டவளாய்த் தன் புதல்வனை நோக்கி "அடா! என் கண்ணே, கண்ணின்மணியே, உன்னைவிட உன் அப்பருக்கும் எனக்கும் தஞ்சம் வேறு எவருமில்லை; பத்துமாதஞ்சுமந்து பாடுபட்டுப் பெற்று மடியிலும் மார்பிலும் ஒக்கலையிலும் வைத்துச் சீராட்டிப் பாலூட்டிக் கண்ணை இமைகாப்பதுபோற் பாதுகாத்து வளர்த்த பாவியாகிய என்னைத் தன்னந்தனியே தயங்கவிட்டு நீ சந்நியாசியாகப் போகத்துணியலாகுமா? அடா என் செல்வமே, உன் தகப்பனுக்கும் எனக்கும் செய்யவேண்டிய ஈமக்கடன் நீர்க்கடன்களைக் காத்திருந்து செய்துவிட்டு அதன்பின் உன் எண்ணப்படி செய். குழந்தாய், நீதானடா, எங்கள் ஆருயிர். உன்னை இமைப்பொழுதும் விட்டு உயிர்வாழமாட்டேன்; எங்கள் சொல்லைத் தட்டி நீ கானகம் போவாயாகில் நான் உடனே வானகம் போவேன்; உன்மேல் ஆணை" என்று சொல்லி ஓலமிட்டாள்.

தன்னை பெற்ற தாய்தந்தையர் இப்படிக் கலங்கவும் உறவினர் வருந்தவும் தருமன் அவற்றைப் பொருட்படுத்தானாய்க் கானகஞ் செல்லுதலும் அவன் பிதா மாதாக்களும் நிழல்போல் அவனைப் பின்றொடர்ந்தனர்.

உற்றார் வருந்தப் பெற்றோர்தொடரச் சென்றதருமன் தவத்தில்மேம்பட்ட பிருகு முனிவருடைய ஆச்சிரமத்தை யடைதலும் அவர்களும் அங்கே சென்றனர். பின்னை முனிவரை வணங்கி ஒதுங்கிநிற்க, அவன் பெற்றாரும் அம்மாமுனிவரின் அடிகளில் வீழ்ந்து வணங்கி "முனிபுங்கவரே, எங்கள் முறைபீட்டைக் கேட்டருள வேண்டும்; இவன் எங்களுக்கு ஒரேயொரு குழந்தை; இருபிள்ளையை வேண்டி நாங்கள் போகாத தலமில்லை; கையெடாத தெய்வமில்லை; ஆடாத தீர்த்தமில்லை; அநுட்டிக்காத விரதமில்லை; இப்படிப் படாத பாடெல்லாம் பட்டு இவனை அரிதிற் பெற்று வளர்த்து இயன்ற கல்வியையும் ஊட்டிவைத்தோம்; இவன் இப்பொழுது எங்களைத் தயங்கவிடுத்துத் துறவியாகப்போகிறேனென்று பிடிவாதஞ் செய்கின்றான்; நாங்கள் எத்தனையோ புத்திகளைச் சொல்லித் தடுக்கவும் கேட்கின்றானில்லை; இவனைப் பிரிந்து எங்களால் உயிர்வாழ்தல் முடியாது; எல்லாமறிந்த மகானுபவரே; தேவரீர் இவனுக்கு ஆகவேண்டிய புத்திபுகட்டி இவன் கொண்ட நோக்கத்தைத் தவிர்க்கச் செய்து எங்களுடன் வீட்டிற்கு மீண்டு வரும்படி செய்தருளவேண்டும்; உமக்கு அடைக்கலம்" என்று பின்னரும் அம்முனிவரை வீழ்ந்து வணங்கியிரந்தனர்.

இவற்றையெல்லாம் கேட்ட பிருகுமாமுனிவர் சுபுத்தன்மீதும் அவன் மனையாள் மீதும் பரிவுகொண்டு தருமனை நோக்கி "அப்பனே, இப்படி வந்திருக்குதி" எனத் தமது பக்கத்தில் இருக்கச்செய்து சொல்லுகின்றார்:

"குழந்தாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கினையும் தழுவி இம்மை மறுமைப் பயன்களை இல்லறமுந் தர வல்லதாகும்; துறவறமும் இவற்றைத் தருமென்பது மெய்யாயினும், அந்த அறத்தைக் கடைப்பிடித்தொழுகும்போது ஒரு பிழை நேருமாயின் அந்தப் பிழையினால் வருங் கேடு இலகுவில் நீக்கத்தக்கதன்று. அன்றியும், துறவிகள் துறவிகளல்லாதார் ஏனைய ஆச்சிரமங்களைக் கைக்கொண்டோர், அந்தணர் முதலாய எவர் தம் இல்லத்திற்கு வரினும் அங்ஙனம் வந்தவரை உபசரித்து அவர் பசியை ஆற்றி அவரை மகிழ்வித்தல் இல்லறத்தார்க்கு மாத்திரமே இயன்றதாகும். இப்படிச் செய்வதனால் அவ்வில்லறத்தார் தம் தீவினையனைத்தும் நீங்கி நன்மை பெறுவர். மேலும் துறவறத்தில் இருந்துகொண்டு செய்யுந் தவம் முதலியன அடுத்த பிறவியிலேயே பயனைத் தரும். இல்லறத்தில் இருந்துகொண்டு செய்யும் புண்ணியங்கள் இம்மையிலும் மறுமையிலும் பயன்படும். அல்லாமலும் சிவத்தைத் தியானித்து மேலான கதியை அடையவேண்டுமென்னும் எண்ணங்கொண்ட ஞானிகட்கும் இல்லறத்திலுள்ளோர் தம் உணவைப் பகுத்துக் கொடுத்து உண்ணுவதால் இம்மையிலும் மறுமையிலும் அவ்வாறான ஞானிகள் விரும்பும் பதவிகளையும் இவ்வில்லறத்தார் இலகுவிற் பெறுதல்முடியும். இன்னும் புத்தென்னும் நரகத்தினின்றும் காப்பதற்குப் புத்திரனைப் பெறவேண்டுமேல் இல்லறத்தைக் கைக்கொள்ளாமல் முடியுமா? குழந்தாய், இவற்றையெல்லாம் ஆராயுமிடத்து உனக்கு இல்லறமே இப்பொழுது நல்லறமென்று புலப்படும்."

இங்ஙனம் பிருகுமுனிவர் பலவாறு இல்வாழ்க்கையின் மகத்துவத்தைத் தெருட்டினர். ஆனால், உலோபியின் காதிற் படும்படி யாசகன் உரைத்த இரப்புரைபோல் முனிவர் கூறிய உறுதிமொழிகள் தருமன் மனத்திற் பயன்படாதொழிந்தன. அவன் முனிவரைப் பின்னரும் வணங்கி மிக்க விநயத்தோடு சொல்லுகிறான்:

"எல்லாமறிந்த முனிவர்பெருமானே, சிறியேன் சொல்வதையும் கேட்டருளல் வேண்டும்; இரத்தந் தசை முதலியவற்றால் ஆக்கப்பட்டுள்ள இந்த உடம்பை வளர்ப்பதையே பொருளாகக் கொள்வதையொழித்து, விரதம் அரிய தவம் என்னும் இவற்றைச் செய்யும் மக்களே இப்பிறவியெடுத்ததன் பயனை யடைவர். இவையில்லாதார் சகடக்கால்போல மாறிமாறிப் பிறந்திறந்து உழல்வர். இல்லறத்தில் இருந்துகொண்டு பிறப்பை நீக்க முயற்சிசெய்தல், கடலை நீந்திக் கடக்க விரும்பியவன் அதற்குப் பிரதிகூலமாகப் பெரிய கல்லையுந் தன் அரையிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு நீந்தத் தலைப்படுதலை நிகர்க்கும். ஆகாயத்திற் பறக்கும் குருவியின் கழுத்தில் ஒரு சிறிய கண்டாமணியைக் கட்டிவிட்டால் அது விண்ணிடை யெழுந்து பறக்க முடியுமா? அதுபோல, மனைவி மக்களென்றும் சுற்றத்தாரென்றும் மண்ணென்றும் பொன்னென்றும் உள்ள பந்தங்களையெல்லாம் இல்வாழ்வான் பிணித்துக்கொண்டு மேலேபோக முடியுமேயல்லாமல் மேலான கதியை அவன் அடைவது எங்ஙனம்? மண்ணுலகிலுள்ள வாம்பில் பெரும்பவத்தைப் பெண்ணுருவாகப் பிரமன் படைத்தனனால் என்றெண்ணியே, சுவாமீ, உம்மைப்போன்ற பெரியோர் இல்லறத்தை விடுத்துத் துறவறத்தைக் கைக்கொண்டுள்ளனர். மேலும்,

> "நாமத்தால் வீழ்ந்து சோர்ந்த குழலியர் தழுவித் தந்த
> காமத்தாற் பெருகும் பாவக் கடற்கரை காண்ப தன்றே!
> பாமத்தாற் கலக்கத் தோன்றும் பரவைநஞ் சுண்ட கண்டன்
> நாமத்தாட் புணையொன்றன்றி நமக்கது கடக்க லாமோ"

பெண்ணாசை முதலியவற்றால் சேர்ந்த பெரும் பவக்கடலை, நஞ்சணி கண்டரான பரமசிவனுடைய திருவடிகளாகிய தெப்பத்தைத் துணையாகக் கொண்டு கடக்க முடியுமேயல்லாமல் வேறு எவ்வாற்றானும் கடத்தல் முடியாதன்றோ? எல்லாமறிந்த தேவரீர் சிறியேனுக்கு விபரீதத்தைப் போதிக்கலாமா" என்று பல ஏதுக்களை யெடுத்துரைத்தான். (வரும்)

---

## வேலையின்மையை ஒழிக்க வழி.

### வங்காளத்தின் முன் மாதிரி.

வங்காளத்தில் சர் டேனியல் ஹமில்டனும் ஸ்ரீ பானர்ஜியுஞ் சேர்ந்து அப்பிரதேசத்திற் கலாசாலைகளிற் படித்துவிட்டுத் தொழிலில்லாமல் திண்டாடித் தற்கொலையுஞ் செய்யலாமா என்று நினைக்கும் நிலைமையிலுள்ள படித்தவர்களுக்குப் பிழைப்புக்கு வழிதேடி வருகிறார்கள். இப்போது அவர்கள் இருவருஞ் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயாரித்துவிட்டதுடன் அதை அமுலுக்குக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது படித்தவர்களுக்கு விவசாயக் கைத்தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறதாம். இடசீரமும், 15க்குக் குறையாத 22க்கு மேற்படாத வயதும், நல்ல படிப்பும் உள்ளவர்களைப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். சாப்பாடு உட்பட எல்லாச் செலவுகளும் சேர்த்து மாதம் 10 ரூபாய் மாணவர்கள் கொடுத்தால் போதும். விவசாயத்திலும் சிறு தொழில்களிலும் ஒரு வருஷப் பயிற்சி அளிக்கப்படும். பயிர் செய்யவும், புஷ்பத் தோட்டங்கள் போடவும், நெசவு நூல் நூற்கவும், பண்ணை வைக்கவும், சாயம்போடவும், சர்க்கரை செய்யவும், மட்பாண்டங்கள் செய்யவும், தையல்வேலையைச் செய்யவும் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆசிரியர்களிற் சிலர் சம்பளம் பெற்றும் சிலர் சம்பளம் பெறாமலும் உழைக்கமுன்வந்திருக்கிறார்கள். பயிற்சிபெற்றபின் 200 ரூபாய் கொடுக்கும் மாணவர்களுக்கு நிலமும் ஒரு குடிசையும் ஒரு ஏருமும் அளிக்கப்படும். இந்த ஸ்தாபனத்தை நிர்வகிக்க உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதாரும் அடங்கிய ஒரு சபையார் இருந்து வருகிறார்களாம்.

இது நல்ல ஏற்பாடு. இவ்வாறு செய்வதால் தொழிலில்லாமல் திண்டாடுவோரும், சிறிது மூலதனத்தையேனும் வைத்துக்கொண்டிருப்பவர்களுமான படித்த வகுப்பார் அந்தகைய பயிற்சிச் சாலைகளிற் சேர்ந்து விவசாயத்தையும் சிறு தொழில்களையும் கற்றுக்கொண்டபின்னர் எங்கும் உத்தியோகம் தேடாமல் அடிமை வாழ்வை அகற்றிச் சுதந்தர வாழ்க்கையை நடத்தக்கூடிய சௌகரியம் ஏற்படும். ஆனால் அப்படிப்பட்டவர்கள் தங்கள் தேவைகளையும் நவீன நாகரீக மோகத்தையும் சிறிது குறைத்துக்கொள்ளவேண்டும். இன்றேல் அந்த வாழ்க்கையில் வாழமுடியாது. எப்படியாயினும் உலகம் சுகிக்கவேண்டுமாயின் மக்கள் தேவைகளையும் நாகரீகமோகத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆதலால் பல படித்த வாலிபர்களும் இதற்குச் சம்மதிப்பார்களென்றே நம்புகிறோம். எனவே இப்படிப்பட்ட பயிற்சிச் சாலைகளை ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்படுத்த அரசாங்கத்தாரும், சமூகத் தலைவர்களும் முன்வந்தால் நலமாக இருக்கும்.

—ஆனந்தபோதினி.

---



## வெளி வந்துவிட்டது!

கந்தபுராணம்—நகாழிபடலவரை

[1934-ம் 35-ம் ஆண்டுக்குரிய கேம்பிரிஜ் ஜூனியர்ப் பாடமாகவுள்ளது]

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கிலமொழிபெயர்ப்பு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதியுள்ள அவதாரிகை வரலாறு என்னுமிவைகளுடன், வெளிவந்துவிட்டது.

விலை சதம் 50.

ஐந்து பிரதிகளை ஒரே முறையில் வாங்குவர்களுக்கு 1 பிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும்.

வண்ணார்பண்ணை 23-12-33. } மானேஜர், இந்துசாதனம்

---

ஓம்! ஓம்!!

## மகாராஜ ஶ்ரீ சிங்கு சாலாமிஸ்ரி லேகியம்.

ஒரே லேகியம் ஆயுர்வேத லேகியங்களுக்கு மகா ராஜா.

இது பலவிதமான சகல ரோகங்களையும் போக்குவதில் மிக்க சிறந்தது. ஆயுள் விருத்தியையும் தேக பலத்தையும் கொடுக்கும். இதன் முக்கிய குணம்:—

சகல வித வியாதிகளையும் நீக்கி, ஆண்மையும் சக்தியும் உண்டாக்கும்.

1 மண்டலம் சாப்பிடுவதற்கு ரூ. 10 0 0. ½ மண்டலம் ரூ. 5 0 0. ¼ மண்டலம் ரூ. 2 12 0.

ஏஜண்ட் V. A. ஸ்ரீனிவாசக் கம்பெனி, பருத்தித்துறை. (S. 1)

(Y. 147. 20-11-33to19-11-34.)

---


ஒன்றைப் பார்த்துச் செய்யப்பட்டதிலும் முதலாகச் செய்யப்பட்ட பொருளே எவ்வாற்றானும் சிறந்தது.

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் தைலம்.

1885—ம் ஆண்டு முதன் முதலாகச் செய்யப்பட்டது.

1933-ம் ஆண்டிலும் இதுவே முதன்மை பெற்றுள்ளது.

இந்தியாவில் இந்தியர்களாலே செய்யப்படுவது.

இத்தைலத்தையே எல்லாவிதமான நோவுகளுக்கும் வலிப்புகளுக்கும் உபயோகியுங்கள்.

(Y 18. 11-2-33—10-2-34-)

# பிரப்பங்குளம் மரக்காலை.

எங்கள் மரக் காலையில் பனைமரம், சலாகைகள், பாலை, வேம்பு, பலா, முதிரை, மா, சமண்டலை, சப்புமரம், வேண்டிய பிரமாணமுள்ள திராந்திகள், பலகைகள், சட்டங்கள், வாங்கு மேசை அலுமாரிகள், விறகு என்னுமிவைகள், வைக்கோல் நெல் இன்னும் வேண்டிய பொருள்களும் எந்த நேரமுங் கொடுக்கப்படும்.

ஒருமுறை எங்கள் சாலையை வந்துபாருங்கள்

மு. தம்பியையா,
பிரப்பங்குளம்றேட்டு
வண்–மேற்கு, யாழ்ப்பாணம்.

(Y. 37. 9–8-3-34.) (வி)

---

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

### மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமெடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை.-316–ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி. திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்றாய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

Y. 2. 31-3-34.)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள்

“காண்டிநேண்டல்”
கம்பெனியின் தொழில்
வருமானம் Rs. 1,500,000.
ஜீவிய நிதியில் சேருங்கள்.
மாதம் ரூபா ௨.
10 வருஷத்தில் ரூபா. 500
ஆதாயம் பெறுவீர்கள்.
ஏழைகளும் செல்வரும்
விரும்பக்கூடிய கம்பெனி.

கிளைஆபீஸ்கள்: சாவகச்சேரி, கண்டி, மட்டக்களப்பு.

E. P. புயூஎல். உடுவில், மானிப்பாய்,
இலங்கைப் பிரதம பரிசோதகர்,

(H. 77. 17·8·33 to 16-2·34.)

தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால்ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தூரஸ்தலங்களிலிருந்து வியாபாரிகள் வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு

(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலோன்.

---

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி

(வரையுளது)

மூலநிதி ரூ. **500,000.** பங்கு ஒன்று ரூ **25.**

25 சதமாக எண்பதுமாதங்கள்கொடுத்து ரூ 25ம் ஆதாயமும் பெறலாம்.

இந்நிதியின் கிளையாய்

### உணவு பொருள் பண்டகசாலை

ஸ்ரீமுகஞு கார்த்திகைமீ 7௳ (22-11-33) புதன்கிழமை இரவு 3 மணி 47 நிமிடத்தின்மேல் ஆரம்பம்.

நோக்கங்கள்:—

1. யாவருக்கும் கைமுதல் ஆக்கல்
2. சுதேசி வியாபார விருத்திசெய்தல்
3. கைத்தொழிலை உயிர்ப்பித்தல்

யாவரும் ஆதரிக்கவேண்டியன இவையே!
உள்ளூர் விளைபொருள், கைத்தொழிற் பொருள்
ஏற்று விலையாக்கி தரவுகூலி பெறுவோம்.

வ. சோமசுந்தரம்,
திருநெல்வேலி ஒற்றுமைநிதிக் காரியாதிகாரி.

(Q. 140. 16/11/33 to 15/2/34.) வி.

---

## புறுடென்ஷல் வீமாக் கொம்பெனி.

1932-ம் வருஷ ஆதாயநன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/விதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 28/விதம்

1932-ம் ஆண்டிலேயே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 23/= விதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ. 20 விதம்,

அசைவற்ற காத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்து வைத்திருப்பதினாலேயே மேற்கூறிய பெரும் நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீமாத் திருவதானால்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி. தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

350,00,00,000 ரூபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது

மேது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப்போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. நிமிஷமொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுள்ளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சொர்ணலிங்கம்,
வடஇலங்கை மேற்பார்வைக் காறன், மானிப்பாய்.
Delmege Forsyth & Co. Ltd. Agents.
The Prudential Assurance Co. Ltd. Colombo

(Y. 180 1-1-34 to 31-12-34) வி.

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரா மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிருப்பு சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள “நாஷனல்” வங்கியிலும் “இம்பீறியல்” வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன இந்தியனோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மனேஜர்.

(Y 143 21-11-33.—20-11-34) (வி)

## ருஷிய—ஜப்பான் யுத்தம்.

### ருஷியமந்திரியின் போர்முழக்கம்.

### யுத்தத்திற்குஜப்பானேபோறுப்பாம்!

சென்ற திங்கட்கிழமை ருஷிய மொஸ்கோ நகரில் நடந்த சமதர்மக் கட்சி மகாநாட்டில் ருஷிய யுத்த மந்திரியான ஸம். வொரஷிலோவ் என்பவர் ருஷியாவுக்கும் ஜப்பானுக்கு மிடையேயுள்ள சம்பந்தத்தைப்பற்றிப் பேசினர். அவர் பேசியதின் சாரமாவது:

"ஜப்பான் யுத்தவெறிகொண்டு எல்லோரையும் போருக்கழைக்கிறது. நாடோறும் அதிகரித்துவரும் தம் குடிஜனங்களைக் குடியேற்றுவதற்காக வேற்று நாடுகளை ஜப்பான் கைப்பற்ற முயற்சி செய்துவருகிறது. யுத்தப் பிரச்சினையை இப்போது ஜப்பானே முதன் முதல் உலகிற் கிளப்ப ஆலோசிக்கின்றது.

"மற்றெல்லா வல்லரசுகளிலும்பார்க்க ஜப்பானே நாடோறும் யுத்ததளபாடங்களை அபரிமிதமாக வாங்கிச் சேகரிக்கின்றது. யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கும்படியும், ஜப்பான் தனது பிரஜைகளினிடை பிரசாரம் புரிந்துவருகிறது.

"ஜப்பானின் முயற்சிகளை நாம் அவதானிக்காமல் விடவில்லை. அதன் ஒவ்வொரு முயற்சியையும் நாம் அவதானித்துக் கொண்டே வருகிறோம். எமது நலன்களை பங்கப்படுத்த, ஜப்பான் தன்னாலான எல்லாவற்றையுஞ் செய்துவருகிறது.

"தூர கிழ்த்திசையில் எமக்கு உரிய நாடுகளில் ஒரு அங்குலத்தைத்தானும் ஜப்பானியர் பிடிக்க விடமாட்டோம். எக்கதி நேரினும், நாம் ஜப்பானியர்க்கு அஞ்சேம்.

"ஜப்பானியரின் செயல்கள் சில, எமக்கு அநுகூலம் அளித்திருக்கின்றன. அவர்களுடைய முயற்சியால நாமும் யுத்த ஆயத்தஞ் செய்து அரணைகளை பலப்படுத்தியிருக்கிறோம். ஜப்பானியர் எளிதில் எம்மை வென்றுவிட முடியாது."

### சீன மந்திரியின் ஜோசியம்.

ஜர்மனியில், சீன மந்திரியாயுள்ள டக்டர் லெலிங்டன் கூ என்பவர், ஜப்பானிய-ருஷியப் பிணக்குச் சம்பந்தமாகப் பின்வருமாறு ஓர் பத்திகை நிருபரிடம் கூறினர்.

"தற்போது ருஷிய - ஜப்பானியருக்கிடையேயுள்ள பிணக்கு சிரமக்கு முற்றிப் பயங்கரமானதுபோல, ஈற்றிற் கொடிய யுத்தமாக முடிவுக்கூடும்."

இதுசம்பந்தமாக ஜெர்மன்பக்கள் ஆவலுடன் இருக்கின்றனர். ஜெர்மனியும் ஜப்பானும் இப்போது சிலகாலமாக தேசபானமையுடன் இருந்துவருவதும், இரு நாடுகளும் சர்வதேசசங்கத்து நடைவடிக்கைகளமீது வெறுப்புற்று அதனை விட்டு நீங்கியதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

### இந்தியமந்திரியின் அநுதாபம்.

ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்காரின மரணத்தையிட்டு இந்திய மந்திரியான சேர் சாமுவல் ஹோரும் இராசப்பிரதிநிதியும் ஸ்ரீ ஐயங்காரின் சகோதரரான ஸ்ரீ கோபாலஸ்வாமி ஐயங்காருக்கு அநுதாபத்தந்தி அனுப்பியிருக்கின்றனர்.

### பிரான்சில் கலகம்.

பிரான்ஸ் தலைநகராகும் பரிஸ் நகரத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை, பல மக்கள் ஒன்று சேர்ந்து அரசாங்க நிலையங்களைத் தாக்கினர். அரசாங்கபொலிசார்க்கும் கலகக்காரருக்கும் நேர்ந்த சண்டையில் ஆறுவர் இறந்தனர் என்றும் 400 பேர் கடுங்காயமுற்றனர் என்றும் இன்று வந்த தந்திச் செய்தி ஒன்று கூறுகிறது. காயமடைந்தவர்களில் 200 பேர் பொலிசாராம்! கலகம் பரவும்போலத் தோன்றுகிறது

### ஜவஹர்லாலைச் சிறைசெய்ய முயற்சி.

அவசர சட்டப்படி பண்டித ஜவஹர்லால் நேருவைக் கைது செய்யலாமா என ஐக்கிய மாகாண அரசினர் இந்திய அரசினரை கேட்டதற்கு, இந்திய அரசினர் அனுமதி மறுத்ததாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேருவின் பிரசங்கங்கள் ஒன்றுகூட சட்டவிரோதமானதல்லா திருக்கையில் அவரைச் சிறைசெய்வது இயலாதென இந்திய அரசினர் கூறிவிட்டனராம். ஐக்கியமாகாண அரசினர் இதற்கு மாறாக கருதுவார்களாயின் பண்டிதர் நேருவைக் சிறை செய்யலாமென்றும் பகிரங்கமாக கூறியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## மண்டைதீவுக் கலக வழக்கு.

### பிரேதம் புதைப்பதால் நேர்ந்த கலகம்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பரிசோதகர் மிஸ்ரர் ஜே எச். ஏ. பர்ணாந்து, மண்டைதீவில் உள்ள 50 பேர் கலகம் செய்து, ஒரு பொலிஸ் சார்ஜன்ற், நாலு பொலிசர் என்பவர்களுக்குக் காயம் விளைத்தனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டினர்.

எதிரிகள் யாவரும் விருந்தின்பேரில் நீதிஸ்தலத்தில் வெளிப்பட்டனர். அவர்களுக்காக நியாயவாதி ஸ்ரீ ரீ. ஆர். நல்லையாவும் நியாயதுரந்தரர் ஸ்ரீ எஸ். ஏ. சபாபதியும் ஏற்பட்டனர். பரிசோதகர் பர்ணாந்துவின் சாட்சியம் வருமாறு:-

"மண்டைதீவுக் கிறீஸ்தவ தேவாலயத்தில் இருந்த பிரேதம் ஒன்றைப் புதைக்க விடச் சிலர் மறுத்தனர் என்று ஜனவரி மாதம் 26ம் திகதி எனக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது. சமாதானபங்கம் ஏற்படாதபடிக்கு நான் ஓர் பொலிஸ் சார்ஜன்றுடன் 2 பொலிசாரை ஆங்கு அனுப்பினேன்.

"அன்று குசைசந்தியாப்பிள்ளை, ஜோண் கிலாஸ்ரி என்னுமிருவர் என்னிடம் வந்து ஓர் பெட்டீசத்தைத் தந்தனர். அப்பெட்டீசம் மாகாணத் தலைவருக்கு எழுதப்பட்டது. மாகாணத் தலைவர் அதனை என்பார்வைக்கு விடுத்தார். தேவாலயத்தில் உள்ள சில பொருள்களைப் பிரேதத்துடன் கொண்டு செல்ல வேண்டுமென அப்பெட்டீசத்திற் காட்டப்பட்டது. மண்டைதீவிற்கு நான் அனுப்பிய பொலிஸ் சார்ஜன்ரிடம் கொடுக்கும்படி பெட்டீசத்தை ஒரு பொலிஸ்மூலமாக நான் அனுப்பினேன்.

"சாயுங்காலம் 6-30 மணியளவில் தாம் எல்லோரும் சனங்களால் கல்லால் எறியப்பட்டார்கள் என்றும் உதவி ஆவசியகம் வேண்டுமென்றும் பொலிஸ் சார்ஜன்ற் எனக்குச் செய்தி அனுப்பினர். நான் உடனே, ஆயுதபாணிகளான சில பொலிசாருடன் அங்கு சென்று, சார்ஜன்றும் பொலிசாரும் அதிக காயங்களடைந்திருந்ததைக் கண்டேன். கற்களினால் எறியப்பட்டுக் காயம்பெற்ற வேறும் மூவரையும் நான் கண்டேன். நான் அங்கு சென்றவுடன் கலகம் அடங்கிவிட்டது. விசாரணை புரிந்தபோது, இந்த 50 பேரும் கலகத்திற் பங்குபற்றினர் என்று தெரியவந்தது."

பரிசோதகரின் சாட்சியத்தின் பின் நீதிபதி எதிரிகளைத் தனித்தனி 150 ரூபாப் பிணையில் விடுத்து விசாரணையை பிப்ரவரி மாதம் 13-ந் தேதிக்குத் தவணையிட்டார்.

### விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
4647-ம் இலக்க வழக்கில்

வழக்காளி. மீசாலை தெற்கு வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை.

எதிராளி: சாவகச்சேரி விசுவநாதர் சின்னையா.

1934 ஆ தைமீ 29-ம் திகதி மேற்படி இலக்கத்தில் எங்களுக்கு விடப்பட்ட கட்டளைப்படி இதன் பின்னுற் காணப்படும் ஆதனம் வருகிற பங்குனிமீ 2-ம் திகதி வெள்ளிக்கிழமை சாயந்தரம் 3 மணி தொடக்கம் காணிக்குள் நின்று பிரசித்த வெந்திசில் விற்கப்படும்.

ஆதனம்.

தனக்கிளப்பு இணமரவிற் குளக்கரை வடல் செ. பா 61⅞. ஆட்சிப்படி செ. பா. 50. குளி. 3. நிலம். செ. பா. 1. குளி 3 பிறநீங்கலாக, மிகுதி செ. பா. 49 ஆகும் இதில் சி..... தம்பி பெண் ஆறுப்பிள்ளையும் வைத்திலிங்கம் அருணாலமும் சகோதர சகோதரிகளும் மறுபேரும். வ. சிதம்பரப்பிள்ளை சவரிப்பிள்ளை மறுபேரும். மே. காசியர் வல்லிபுரம் சிவனடியான் சின்னத்தம்பி மறுபேரும் தெ. சின்னத்தம்பி பெண் இலட்சுமி. இவ்வெல்லைக்குள் அடங்கிய வயல் நிலம் அடங்கலிலும் சொரியல்ய் 39⁄70 (எழுபதில் முப்பத்தொன்பது பங்கு) பாகும.

செல்லையாவும் பின்னோயாமும்.

(Mis 193, 8-2-34.)

## சைவ பரிபாலன சபை.

### அதன் உற்பத்தியும் வளர்ச்சியும்.

(1-2-34-ன் தொடர்ச்சி.)

Hindu Organ முதற்பத்திரிகையில் பத்திராசிரியர் கூற்றாக செல்லப்பாபிள்ளை எழுதிய முதல் வியாசம் இது:—

### OURSELVES.

"The Sanskrit maxim VIDVAN BALAVAN, the equivalent of the Baconian phrase 'Knowledge is power' embodies a truth of universal application. History teaches us that those nations have been always powerful who had made steady progress in the sciences and the arts. At the present day, a Newspaper is an indispensable adjunct of civilization and one of the best mediums for diffusing knowledge among the masses; and a nation's prosperity or its place among other nations may well be measured by its demand for periodical literature. England is undoubtedly one of the most powerful states — perhaps the most powerful — which the world has seen, and the number of Newspapers and periodicals published in Great Britain is 4000 including 200 dailies while Germany has 5000 with 800 dailies and France 4092 with 360 dailies. The whole of Asia with more than half the population of the whole world has only 3000 such publications of which 2000 are credited to the rapidly progressing Japan which, 25 years ago, had not a single Newspaper. If one sets about to classify these publications he will not fail to be struck with the largeness of the number representing every branch of knowledge, every trade and every industry and to meet with quite an army of workers intent on extending the common stock of knowledge. What have we to contrast with all this in Ceylon? The number of Newspapers here may be counted in one's finger's ends. The Hindu community numbering upwards of 600000 or nearly 22 per cent of the whole population of the Island has not a single paper to advocate its interests. A long felt want has induced us to start this paper. We shall not say anything about our future as it depends entirely on the interest taken in our work by the community. But we will say this we have undertaken this work with no other motive than to advance the public interests, and it will be our duty to point out to the people their back-ward condition, especially by drawing their attention to the great moral, intellectual and material progress, which other countries are making and, so far as we are able, by suggesting measures for the bettering of their position. We shall approach the discussion of public questions with all fairness, and be unflinching in fighting against corruption in whatever form it may lurk. To show that pecuniary gain does not enter into our calculations we may state that we have no paid Editor and that a number of gentlemen has generously and disinterestedly offered us their literary help."

இந்துசாதன முதற்பத்திரிகையில் பத்திராசிரியர் கூற்றாக கைலாசபிள்ளை எழுதிய முதல் வியாசம் இது:—

### இப்பத்திரிகை.

"ஒருவர் மேலுள்ள பகையை மற்றொருவர் சாதித்தற்கு ஏற்ற கருவி பத்திரிகை என்பது சிலருடையகருத்து. நாம் இதற்கு முழுமாறான கருத்துடையேம். பலருக்கும் பொதுவான நன்மைக்குரிய விஷயங்களைப் பேசுவதே பத்திரிகையென்பது நம்முடைய கருத்து. பத்திரிகைகளை நடத்துகிறவர்கள் பலர், முதலிலே பத்திரிகையினால் உண்டாகும் பயனை வேண்டியமட்டும் விரித்துப் பேசியிருக்கிறார்களாதலால், நாம், அதனை எல்லோரும் அநுபவத்தால் அறிந்துகொள்ள வைத்துவிட்டு, இந்துசாதனம் என்னும் இப்பத்திரிகை தொடங்கிய நோக்கத்தை மாத்திரம் இங்கே காட்டுவோம்.

நம்முடையசட்டநிருபணசபையில், அந்த அந்தச்சாதியாருக்கு உள்ள குறைகளைப் பேசி நிறைவேற்றுதற்கு ஒவ்வொருசாதியாருக்கும் ஒவ்வொரு பிரதிநிதி ஏற்பட்டிருத்தல்போல இலங்கையிலுள்ள மற்றெல்லாச் சமயத்தாருக்கும் சாதியாருக்கும் வேண்டிய விஷயங்களைப் பேச வேண்டிய பத்திரிகைகள் இருக்கின்றன. சைவர்களாயுள்ள தமிழர்களுக்கு மாத்திரம் ஒரு பத்திரிகையும் இல்லை. நம்மவர்கள் சைவத்தைப் பற்றி விளம்பரந்தானும் பத்திரிகைகளில் வெளிப்படுத்தவேண்டுவராயின், சென்னைப்பட்டணம்முதலான தூரமான இடங்களுக்கு அனுப்பவேண்டி இருக்கின்றது.

இனி, நம்முடைய நாட்டிலோ ஒற்றுமை கிடையாது. ஒற்றுமை மாத்திரம் உண்டாயின் நம்மவர் உயர்வும் ஐசுவரியமும் செல்வமும் இஷ்டமும் அடைய வேறு யாதுந் தடையில்லை. ஒற்றுமையின்மையால் அநேகர் தங்களுக்குள்ள குறைகளை நிவிர்த்திசெய்ய இயலாதவர்களா யிருக்கிறார்கள். சிலர் தங்களுக்குள்ள குறைதான் இன்னதென்றும் அறியாதவர்களா யிருக்கிறார்கள். இங்கிலாந்திலே ஏறக்குறைய நாலாயிரம் பத்திரிகைகள் உலாவுகின்றன. ஆதலால் அங்கே ஒற்றுமை மிகவும் உண்டு. ஒற்றுமையை உண்டாக்குவது பத்திரிகையென்பது பிரசித்தம்.

இன்னும் நம்மவர்களுக்குள் அபிமானங் கிடையாது. அந்நியசாதியார் அந்நியதேசத்தார் அந்நியசமயத்தார் தம்மைப்பற்றி எவ்வளவுஇகழ்ந்துபேசினாலும் நம்மவர் கேட்டுச் சகித்துக்கொண்டு மௌனமாயிருக்கிறார்கள். எதிர்வார்த்தை பேசுகிறார்களில்லை. தங்களுடையசாதிக்கும் தங்களுடைய தேசத்துக்கும் தங்களுடைய சமயத்துக்கும் தங்களுடைய முன்னோருக்கும்உள்ளபெருமையை முழுதும்மறந்துவிட்டார்கள். அந்நியர்எதைச் செய்தாலும் அதுவே நல்ல முன்மாதிரி என்று அதையே பின்பற்றுகிறார்கள். அன்றித் தங்களுடைய கல்வி தங்களுடைய சாத்திரம் தங்களுடைய சமயம் தங்களுடைய தொழில் என்னும் இவை முதலியவைகளை விருத்திசெய்யவும் இவைகளிலே மேன்மேலும் திருத்தமடையவும் நினைக்கிறார்களில்லை.

ஆதலால் பலதலைப்பட்டுக் கிடக்கும்வெவ்வேறு எண்ணமுடைய நம்மவர் எல்லோரும் தமக்குள்ள குறைகளையும் அவைகளை முடிக்கும் வழிகளையும் அறிந்து, அபிமானமுடையராய்த் திரண்டு ஒற்றுமைப்பட்டுப் பெற்றுவாழத் தூண்டிவிடுவதும் அவர்களுக்காக அன்பு கொண்டு பேசுவதுமே இப்பத்திரிகையின் முழு நோக்கமாகும்

நம்மவர் ஒற்றுமையுற்றுப் பொதுவாக நன்மையை அடையவேண்டுமென்னும் ஒரே கருத்து நமக்கு இருத்தலால், உட்சமயக் கலகங்களுக்கும் வசைமொழிகளுக்கும் இப்பத்திரிகையில் இடம் சிறிதுங் கிடையாது.

பத்திராதிபர்கள் பலர் பலமுறை நட்டமடைந்து கை சோர்ந்ததைக் கண்டிருக்கும், நம்மவர் அந்நியரால் அடையுஞ் சிறுமையைப் பார்த்துச் சகிக்காது பொதுநன்மைக்காகவும் சமயவிருத்திக்காகவும் இப்பத்திரிகையைத் தொடங்கியிருக்கிறோம். இதனைத் தளர்வடையாது நிலைபெறும்படி செய்தல் நம்மவர் எல்லாருக்குங் கடனாகும். இதையுந்தவறவிட்டால் நம்மவர்க்கு வேறு பத்திரிகை வாய்ப்பது அரிது அரிது. கையொப்பக்காரருடைய உதவி இருக்குமாயின், மாசமிரண்டுதரம் வெளிப்படுத்தத் தொடங்கிய இப்பத்திரிகையை மாசம்நாலுதரம் வெளிப்படுத்த ஆயத்தமாக இருக்கிறோம்."

இலங்கையிலே சைவசமயிகளுக்குச் சார்பான வேறுபத்திரிகை இல்லாதிருந்தமையால் இந்துசாதன பத்திரிகையானது வடமாகாணத்திலிருந்த மற்றைய பத்திரிகைகளிலும் பார்க்க அதிக விருத்தி யெய்தலாயிற்று. (தொடரும்.)

## சமிதம்.

### விநாயகருக் குரிய நாமங்களுள் ஏரம்பன் என்ற சொல்லின் கருத்தும் வல்லபை கணபதி என்பதின் நியாயமும்.

ஹேரம்ப: என்ற சொல்லின் பொருள் வெசமீபத்தில் இருப்பவரெனப் பொருள்படும் "ஹ" என்னும் எழுத்து வெளுக்கும் ஹே என்பது ஹ என்பதில் ஏழாம் வேற்றுமையுடையபதமாகும். ரபித் என்ற தாது, நிற்றல் என்னும் பொருளுடையது. அது பிரத்யயமும் சமாதேசமும் பெற்று ரம்பமென்றுயது. வெசமீபத்தில் என்பது தாற்பரியம். நிற்க வல்லபை விநாயகர் என்றதற்கு நியாயம்.—

முன்னொருகற்பகாலத்திலே மரீசி என்னும் பெயரையுடைய முனிவர் மானசரச என்னும் நதிக்கரையில் இருபத்தோராயிரம்வருடம் கணேசரைக் குறித்துத் தவஞ்செய்து, கணேசர் வரப்பிரசாதத்தால் உலகங்களெல்லாந்தன்னை வணக்கவும், நிகரற்ற அரசாட்சி செய்யவும் உமாதேவியார் புத்திரியாகிப் பிறக்கவும் சிவபிரான் விநாயக மூர்த்தமா யெழுந்தருளிவந்து விவாகஞ் செய்யவும், இதுபோன்ற அநேகவரங்களையும் எல்லாதேவர்களும் முனிவர்களும் வணங்கும் கீர்த்தியையும்பெற்று, பிரமன் தேவவல்லியென்னும் பெண்ணைச் சிருட்டித்துக் கொடுக்க விவாகஞ்செய்து வாழும் காலில், சிவபெருமானது கட்டளையினுல் யமுனாநதியில் ஒரு தாமரைப்பூவில் உமையம்மை ஓர்சங்கு வடிவாய்த்தோற்றி நாளுக்குநாள்வளர்ந்து குழந்தை வடிவாயிருக்க, இதனை மரீசி முனிவர் அறிந்து எடுத்துக்கொண்டுபோய்ச் சீராட்டி வல்லவையெனப் பெயர் வைத்து வளர்த்துவரும்நாள் முனிவர் ஆஞ்ஞையினுல் அநேகமுனிவர் வசிக்கும் ஓர்வனத்துத் தவச்சாலையயடைந்து ஏகாட்சர மந்திரத்தை யுச்சரித்து தவஞ் செய்துகொண்டிருந்தார். அங்கே சிவபெருமான் ஓர் பிராமணனைப்போலவந்து பெண்ணேயுன்னை விவாகஞ் செய்வதற்காகவே வந்தோமென்று சொல்ல அத்தருணம் உமாதேவியார் அப்பிராமணராகிய சிவபிரானைப்பார்த்து நீர் விரும்புவது தகுதியல்ல அந்தப் பரமதயாளுவாகிய சிவத்தையன்றி வேறொருவரையும் நினைக்கமாட்டேனென்று மறுக்க அப்பொழுது பரமசிவம் சுயரூபத்தோடு ஐந்து யானைமுகமும் பத்துத் திருக்கரங்களுமாக மயில்வாகனு ரூடராய்க் காட்சி கொடுத்து மரீசிமுனிவர் வேண்டுகோளால் எல்லா ஆடம்பரத்தோடும் வல்லபை என்னும் பெயரையுடைய அம்மையாரை விவாகஞ் செய்தனர்.

இந்த நியாயத்தினுற்ருன் வல்லபாம்பாசமேத விக்கினேஸ்வராய நம: என்று அவாது அருச்சனைக் கடைசியில் சொல்லி முடிக்கின்றார்கள்.

சிலர் ஏரம்பன், வல்லபைகணபதி என்பவற்றின் கருத்து நியாயங்களைக் கேட்டால் விழிக்கின்றார்கள்.

உற்சவகாலத்தில் விநாயகருக்குப் பெருச்சாளிவாகனமாயிருக்க மயில் வாகனத்திலும் எழுந்தருளப்பண்ணலாமா என்று கேட்கின்றவர்களும் நினைக்கின்றவர்களும் இந்த நியாயத்தைக்கண்டு தங்கள் சந்தேகத்தை நீக்கிக் கொள்ளுவார்களாக.

இவரைப் பஞ்சமி-நாயகரென்றும் சொல்லுவர்.

ச. பொன்னுச்சாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

### இங்கிலாந்தில் வேலையில்லாத் திண்டாட்டம்.

இங்கிலாந்தில் சென்ற மாதம் தொடக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. ஜனவரிமாதம் 22-ம் தேதி தொடக்கம் இற்றைவரை அங்கே வேலையில்லாதோரின் தொகை 2,389,000 என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

### NOTICE OF SALE OF LAND
### காணி விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 4532-ம் இலக்க வழக்கின் 1934ஆம் தைமீ 31-ந் தேதியைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1934ஆம் பங்குனிமீ 10-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

1. வண்ணார்பண்ணை மேற்கு "பரந்தன் புளியடி" குளி $2\frac{97}{351}$-ம் கொல்ல கம்மாலையும், எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சபாரெத்தினத்தின் ஆதனம். வடக்கு ரோட்டு. மேற்கு கையொழுங்கை. தெற்கு கந்தர் சோதிமுத்துவின் ஆதனம். இதடங்கலும்.

2. மேற்படி வண்ணார்பண்ணை மேற்கு "பரந்தன் புளியடி" குளி $4\frac{297}{351}$-ம் மேற்படி குளி $1\frac{1}{2}$-ம் மொத்தம் குளி $6\frac{1}{2}$-யும் கொல்ல கம்மாலையும். எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சபாரெத்தினத்தின் ஆதனம். வடக்கு கந்தர் சோதிமுத்துவின் ஆதனம். மேற்கு கையொழுங்கையும், வைத்திலிங்கம் சின்னத்தம்பியின் ஆதனமும், தெற்கு சேகுமுகைய்தீன் பெண் முகம்மதுமீரா முகைய்தீன் நாச்சியாவின் ஆதனம். இதடங்கலும்.

V. செல்வத்துரை,
கொம்மிசனர்.

6—2—34.

வண்ணார்பண்ணை கிழக்கு சொக்கன் வைத்தி
வழக்காளி.

Vs.

வண்ணார்பண்ணை கிழக்கு வைரமுத்து அன்னம்மை (தனக்காகவும், அவருடைய காலஞ்சென்றுபோன பெண்சாதி முத்தம்மாவின் ஆதனத்துக்காகவும்.)
எதிராளி.

(Mis. 200. 8—2—34.)


## N. வைத்திலிங்கம் & கம்பெனி
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஷ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No 30.

(Y. 201. 8-2—7-2 35)



இன்னும் ஒருவாரத்திற்கிடையில் இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்

## 100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால், மலிந்தவிலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது தண்ணிரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
Y. 12—7-5-34 தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.




எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

றங்கூன் தேக்கமரங்கள். பெயர்பெற்ற "பவுண்மார்க் ஓடுகள்."

தற்போது பேரானந்தவல்லி என்னும் கப்பலில் புதிதாக தேக்கமரங்களும், சிலாகைகளும் எங்களுக்கு வந்திருப்பதால் வருகிற திங்கட்கிழமை (5—2—34) பெரியகடையிலுள்ள எங்கள் ஸ்ரோறில் பெற்றுக்கொள்ளலாம்.

திறமான
## பவுண்மார்க் ஓடுகள்.



இன்னும் ஏறக்குறைய ஒரு வாரத்தால் யாழ்ப்பாணம் ரேகில் சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் முந்தியே அறிவிக்கவேண்டியது.

Phone No. 93. சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.

(Y. 3. 26-4-34).


### NOTICE OF SALE.
### கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. 3078.

வழக்காளி:- அல்வாய் வடக்கு வேலாயுதர் சின்னத்தம்பியார் சின்னையா.

எதிராக.

1. கரவெட்டி வடக்கு வயித்தியலிங்கம் வயிரமுத்துவும்,
2. கரவெட்டி வடக்கு தற்காலம் வெலிகம மகாம டேவிற் குணரத்தினம் யோசேப்புவும்,
3. கரவெட்டி வடக்கு தற்காலம் தெல்லிப்பளை டேவிற் குணரத்தினம் யோசேப்பு பெண் கனகம்மாவும்.

இதன்பின் விவரிக்கப்படும் ஆதனங்கள் 1934ம் ஆண்டு பங்குனிமீ 1ந்உ வியாழக்கிழமை முதலாம் இரண்டாம் ஆதனங்களும் 3ந்உ சனிக்கிழமை 3ம் ஆதனமும் குறித்த காணிகளிடமாகவிருந்து கொம்மிஷனர் கு. வேலாயுதர் நாகலிங்கம் ஆகிய என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1934ம் ஆண்டு பங்குனிமீ 1ந்உ வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் விற்கப்படும்.

ஆதனங்கள்.

I. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி குறளிக்குறிச்சியிலுறை காளையன்தோட்டம் நிலப்பரப்பு $3\frac{1}{4}$. ஷெ காளையன் தோட்டம் நிலப்பரப்பு $6\frac{3}{8}$ நிலைகளில் 1ம் பிரிவில் மூன்றேமுக்காலேயரைக்காலும் 2ம்பிரிவில் மேற்கரைவாசிக்காக ஆட்சியிலிருக்கும் நிலப்பரப்பு $3\frac{3}{16}$ம் ஒரேதண்டாயிருக்கின்றன. இத்தண்டுக்காக ஆட்சியிலிருக்கும் நிலப்பரப்பு $6\frac{3}{4}$ல் வடக்காகப்போகும் ரோட்டுக்கு மேற்குப்பக்கமாக முக்கால்பரப்புநீக்கி மிகுதிக்காக ஆட்சியிலிருக்கும் நிலப்பரப்பு 6ம் அதற்குட்பட்ட கல்வீடு, கொட்டில்கள், பனைகள், புளிகள், மாமரங்களும் கிழக்கெல்லையிற் கிணறும். எல்லை: கிழக்கு கிணறும் கந்தையாபெண் கதிராசிக்கும் மறபேருக்குமுடைய ஆதனம். வடக்கு ரோட்டு. மேற்கு நாகப்பர் கந்தையாவுக்குடைய ஆதனமும் ரோட்டும். தெற்கு வாரியார் வல்லிக்குட்டிக்கும் மறபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் கிழக்கெல்லைக் கிணற்றில் இதற்குரிய பங்கும் மற்றவைகள் யாவும்.

2. ஷெ மாகாணம் ஷெ டிஸ்திறிக் ஷெ பகுதி ஷெ கோயிற்பற்று கரவெட்டி கதிரிக் குறிச்சியிலுறை குறையன்தோட்டம் நிலப்பரப்பு 13, இதில் வடகிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு 2 குளி6 நீக்கி, மிகுதி நிலப்பரப்பு 10 குளி 12 பனைகள் வடலிகளும். எல்லை: கிழக்கு கந்தையன் பெண் பாறிக்கும் மறபேருக்குமுடைய ஆதனம். வடக்கு ஒழுங்கையும் கட்டன் கந்தையனுக்குடைய ஆதனமும், மேற்கு ஒழுங்கை, தெற்கு உல்லியன் ஒல்லையில் அம்மன்கோவிலுக்குடைய ஆதனமும் சண்முகம் பெண் வள்ளியம்மைக்கும் மறபேருக்குமுடைய ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் அடங்கலும். இவ்வாதனம் கரவெட்டி வடக்கு கட்டன் கந்தையனுக்கும், கந்தன் கதிரனுக்கும் ரூபா 1000க்கு ஒற்றிக்கமைவாகவும்.

1934ம் ஆண்டு பங்குனிமீ 3ந்உ சனிக்கிழமை பின்னேரம் 2 மணி தொடக்கம் விற்கப்படும்

ஆதனம்.

3. ஷெ மாகாணம் ஷெ டிஸ்திறிக் பச்சிலைப்பளிப்பகுதி முகமாலைக்கோவிற்பற்று முகமாலையிலுறை தெற்குவடியும் மறபிரிவுகளும் நிலப்பரப்பு 112. இதில் கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு 100ம் அதற்குட்பட்ட தென்னைகள் பனைகள் வடலிகளும். எல்லை: கிழக்கு சின்னத்தம்பி சின்னையாவுக்கும் மறபேருக்குமுடைய ஆதனம். வடக்கு மணல்த்தெருவும் சிதம்பரப்பிள்ளை தாமுவின் உரிமைக்காருக்கும் மறபேருக்குமுடைய ஆதனங்களும். மேற்கு கயிரவிப்பிள்ளை முருகேசுவுடைய ஆதனம். தெற்கு மணல்த்தெரு. இது அடங்கலும் இவ்வாதனம் காம்பசம் யாக்கோபு போசேப்புவுக்கும், பெண் சோர் சின்னம்மாவுக்குமுடைய சீவியவுரித்துப் பிறநீங்கலாகவும்.

கு. வே. நாகலிங்கம்,
கொம்மிஷனர்.

புலோலிமேற்கு.
1934ம் ஆண்டு தைமீ 25ந்உ.
(Mis 199. 8-2-34.)

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன்
கோன்முறையரசுசெய்ககுறைவிலாதுயிர்கள்வாழ்க
நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

Prin ted & Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai-Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday, February 8, 1934.